அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.7
1989, ஏப்ரல் 24ஆம் திகதி.

அரசாங்க அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

ஒரு இடைக்கால நடவடிக்கையாக அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலுமிருந்து அரசாங்க உத்தியோகத்தர்களை மாகாண சபைகளுக்கு தற்காலிகமாக விடுவித்தல்.

1989.02.09ஆம் திகதியுடைய இல. 10/89ஆம் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு மேலதிகமானது.

02. தற்காலிகமாக மாகாணச் சபைகளுக்கு உத்தியோகத்தரை விடுவித்தல் பின்வருவனவற்றிற்கு கீழ் அமையும்:-

(அ) அவ்வாறு விடுவிக்கப்படும் உத்தியோகத்தர் தற்பொழுது மாகாண சபைக்கு பாரிக்கப்பட்ட கருமங்களில் குறைந்தது ஒரு பங்கு கடமை புரிபவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) அத்தற்காலிக விடுவித்தல் ஒரு வருட காலத்திற்காகும்.

(இ) குறித்த உத்தியோகத்தர் தற்காலிக விடுவித்தலுக்கு விரும்ப வேண்டும். அதேபோல மாகாணச் சபையும் அவருடைய தற்காலிக சேவையை கோர வேண்டும். (மாதிரிக் கடிதம் இணைக்கப்பட்டு உள்ளது.)

(ஈ) மாகாண சபைக்கு தற்காலிகமாக விடுவிக்கப்படும் உத்தியோகத்தருக்குரிய நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றி அமையும்.

(உ) தற்காலிகமாக விடுவித்த காலத்துள் அரசாங்கத்தால் வகுக்கப்படும் கருமங்களையும் புரிய வேண்டும்.

(ஊ) தற்காலிகமாக விடுவித்த காலத்துள் ஏதேனும் மேலதிக கொடுப்பனவுகள் உத்தியோகத்தருக்கு வழங்கப்படமாட்டாது.

(எ) அவ்வாறு தற்காலிகமாக விடுவிக்கப்படும் பொழுது மாகாண சபையில் கருமம் புரிவதற்காக மாகாண அரசாங்க சேவைக் குழுவினால் தற்காலிக நியமனக் கடிதம் வழங்கப்படும். (மாதிரிக் கடிதம் இணைக் கப்பட்டுள்ளது.)

..2

03. "இதுவரையில் தமது மாகாண சபை இயங்குவதற்கு வேண்டிய ஒவ்வொரு தரத்து உத்தியோகத்தர்களின் குறைந்த எண்ணிக்கையை பிரதான செயலாளர் கணித்திருப்பார். அவருக்கு வேண்டிய உத்தியோகத்தர்களின் விபரத் தாளை மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்புவார். அரசாங்க அதிபர் பொருந்திய திணைக்களத் தலைவர்களுடன் ஆலோசித்து, 02ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட நிபந்தனையின் கீழ் உத்தியோகத்தர்களை மாகாண சபைக்கு விடுவித்தலுக்கு வேண்டிய நடைமுறைகளை எடுப்பார்.

04. சம்பளம் கொடுப்பதற்கு வேண்டிய "கொடையை" அரசாங்க மாகாண சபைக்கு வழங்கும் வரை, தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர் தமது சம்பளத்தையும் படிகளையும் இப்பொழுது அவை வழங்கப்படும் அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்வார்.

05. மாவட்டத்திலுள்ள உங்களது உத்தியோகத்தர்களை தற்காலிகமாக விடுவித்தலுக்கு மேற்கூறிய முறையின்படி நடவடிக்கை எடுக்குமாறு வேண்டப்படுகிறது.

06. இல. 10/89ஆம் 1989.02.09ஆம் திகதிச் சுற்றறிக்கையில் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிக் கடிதத்திற்குப் பதிலாக இத்துடன் கடிதம் இணைக்கப்பட்டுள்ளது.

07. பொலிஸ் திணைக்களத்தில் சேவை புரியும் ஏதேனும் உத்தியோகத்தர்களுக்கு இந்த ஒழுங்கமைப்புக்கள் பொருந்தாது.

ஒப்பம் (சிறில் கமகே.)
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

## மாகாண அரசாங்க சேவைக் குழுவினால் வழங்கப்படும் மாதிரி நியமனக் கடிதம்

திரு/திருமதி/செல்வி..............

.........................

### மாகாண அரசாங்க சேவையில் தற்காலிக நியமனம்

..................மாகாணச் சபை சேவையின் பொருட்டு உங்களை விடுவித்து..................அவர்களால் அனுப்பப்பட்ட........ஆந் திகதி இல................கொண்ட கடிதத்துடன் தொடர்புடையதாகும்.

உங்களை 19............ஆந் திகதி தொடக்கம் ஒரு வருட காலத்துக்கு மாகாண அரசாங்க சேவையில் தற்காலிகமாக நியமிப்பதற்கு ...................மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவொன்று விரும்பியுள்ளதாக அறிவிக்கும்படி ஆணையிட்டுள்ளது.

இத்தற்காலிக நியமனத்தை அடிப்படையாகக் கொண்டு உங்களுக்கு மாகாண அரசாங்க சேவையின் கீழ் நிரந்தர நியமனம் ஒன்றை பெறுவதற்கான உரிமை இல்லை என்பதை கருத்திற் கொள்ளவும்.

செயலாளர்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு
..................மாகாணம்.

திரு .................. இல :- ..............
(பெயர்)

..................
(பதவி)

ஒரு இடைக்கால நடவடிக்கையாக அமைச்சுக்களிலும்/திணைக்களங்களிலுமிருந்து அரசாங்க உத்தியோகத்தர்களை மாகாண சபைக்கு விடுவித்தல்.

1989 ஏப்ரல் 24 ஆந் திகதி இல. 10/89(1) கொண்ட அரசாங்க நிருவாக அமைச்சின் சுற்று நிருபத்துடன் தொடர்புடையதாகும்.

02. 89.02.09ஆந் திகதி இல. 10/89உம் 89.04.24 ஆந் திகதி இல. 10/89(1)உம் கொண்ட அரசாங்க நிருவாக அமைச்சின் சுற்று நிருபத்தில் காட்டப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க ஒரு இடைக்கால நடவடிக்கையாக ............ மாகாண சபைக்கு விடுவிப்பதற்கு நீங்கள் விரும்புகின்றீர்களா என்பதை இங்கு கீழ் காட்டப்பட்டுள்ள படிவத்தில் குறிப்பிடவும்.

..................
திணைக்களத் தலைவர்

.................................................. ஆகிய நான்
(பதவியும், பெயரும்)

இடைக்கால நடவடிக்கையாக ...................... மாகாணச் சபைக்கு விடுவிப்பதற்கு விருப்பம்/விருப்பமில்லையென்று இதனால் அறிவிக்கின்றேன்.

................
கையொப்பம்

திகதி :-